Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No. 114 / 2020

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 6 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | சரவண குமார் |
| Father's Name | : | முருகேசன் |
| | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 18.06.2025.

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் தொழிற்பேட்டையில் குடியிருந்து தற்போது பாலமலை முருகன் டிரான்ஸ்போட்டில் கணக்காளராக பணிபுரிந்து வருகிறேன். 2019 ம் வருடம் முத்தூட் பின்காப்பில் கஸ்டமர் சர்வீஸ் எக்சிகியூட்டிவாக பணிபுரிந்து வந்தேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 15.11.2019 ம் தேதி மாலை சுமார் 04.35 மணியளவில் ஆஜர் எதிரி பசுபதிபாளையம் காவல் ஆய்வாளருடன் முத்தூட் பின்காப் நிறுவனத்திற்கு வந்து வஞ்சியம்மாள் என்ற பெயரில் 4 பவுன் நகை அடகு வைத்திருந்ததை ஆஜர் எதிரி

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

செல்லதுரை துளசி குடும்பு கேஎஸ்வி பள்ளி அருகில் வயதான பெண்ணிடமிருந்து பறித்ததாக போலிசார் கூறியதன்பேரில் நான் நகையை எடுத்து காண்பிக்க அருகிலிருந்த ஆஜர் எதிரி செல்லதுரை நகையை அடையாளம் காட்டினார். அதை போலிசார் விசாரணைக்காக கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. என்னுடன் மேலாளர் மாரியம்மாள் கையொப்பம் செய்தார். **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள நகையைதான் ஆஜர் எதிரி அடையாளம் காட்டி நானும் அடையாளம் காட்டினேன். போலிசார் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார்கள். அந்த போட்டோ அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**